செய்தி வெளியீடு எண் : 124 நாள் : 19.01.2023

**ஒடிசா மாநிலத்தில் நடைபெறும் 15-வது உலகக் கோப்பை (ஆண்கள்) ஹாக்கி போட்டியினை காணவும், அம்மாநிலத்தில் உள்ள விளையாட்டு அரங்கங்களின் கட்டமைப்புகளை பார்வையிடவும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒடிசா மாநிலம் சென்றுள்ளார்.**

உலக நாடுகளில் 16 நாடுகள் பங்கேற்கின்ற 15-வது உலகக் கோப்பை (ஆண்கள்) ஹாக்கி போட்டியானது ஒடிசா மாநிலத்தில் உள்ள புவனேஸ்வர் மற்றும் ரூர்கேலா ஆகிய இடங்களில் 13.01.2023 முதல் 29.01.2023 வரை நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டிகளை காணவும், ஒடிசா மாநிலத்தில் உள்ள விளையாட்டு அரங்கங்களின் கட்டமைப்புகளை பார்வையிடவும் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.01.2023 அன்று ஒடிசா மாநிலம் சென்றார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஹாக்கி இந்தியா பொருளாளர் திரு.சேகர் மனோகரன், ஹாக்கி இந்தியா செயல் இயக்குநர் கமாண்டர் ஸ்ரீ வத்ஸா மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் புவனேஸ்வர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

ஒடிசா மாநிலத்தின் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.அட்னு சபயாசச்சி நாயக் அவர்கள், (Hon'ble Minister for food and civil supplies Thiru.Atanu Sabyasachi Nayak) வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் வி.கலாநிதி வீராசாமி அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், ஒடிசா மாநில வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. மதிவதனன் ஆகியோர் உடனிருந்தனர்.

தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (19.01.2023) புவனேஸ்வரில் உள்ள கலிங்கா விளையாட்டு அரங்கத்தில் கால்பந்து, ஹாக்கி, தடகள மைதானம், நீச்சல் குளம் மற்றும் துப்பாக்கி சுடும்

அரங்கம் ஆகியவற்றை பார்வையிட்டு உள் கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயன்பாடு குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், ஒடிசா மாநில மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.துஷார்கன்டி பெகரா அவர்கள் (Hon'ble Minister for Sports Thiru.Tusharkanti Behra), விளையாட்டுத்துறை சிறப்பு செயலாளர் திரு. வினில் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள், (Thiru.Vineel Krishna, IAS) வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் வி.கலாநிதி வீராசாமி அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மருத்துவர் கா.ப கார்த்திகேயன் இ.ஆ.ப அவர்கள் மற்றும் ஒடிசா மாநில விளையாட்டுத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in